செய்தி வெளியீட்டு எண்: 90 நாள்: 19.03.2021

**மாவட்ட தேர்தல் கட்டுப்பாட்டு அறையின் செயல்பாடுகளை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர், தேர்தல் பொது பார்வையாளர் செலவின பார்வையாளர் ஆகியோர் ஆய்வு**

கள்ளக்குறிச்சி மாவட்டம், மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகத்தில், 2021 சட்டமன்ற பொதுத்தேர்தலை முன்னிட்டு அமைக்கப்பட்டுள்ள, 24 மணி நேரமும் செயல்படும் தேர்தல் கட்டுப்பாட்டு அறை, வாக்காளர் சேவை மையம், ஊடக சான்றிதழ் மற்றும் கண்காணிப்பு குழு ஆகியவற்றின் செயல்பாடுகளை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கிரண் குராலா,இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், கள்ளக்குறிச்சி, சங்கராபுரம் சட்டமன்ற தொகுதி தேர்தல் பொது பார்வையாளர் திரு.சந்திரசேகர் வாலிம்பே, இ.ஆ.ப., மற்றும் தேர்தல் செலவின பார்வையாளர் திரு.பிரசன்னா வி.பட்டனசெட்டி, இ.வ.ப., ஆகியோர் இன்று (19.03.2021) நேரில் ஆய்வு மேற்கொண்டனர்.

தமிழக சட்டமன்ற பொதுத் தேர்தல் நடைபெறுவதையொட்டி இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள 24 மணி நேரமும் செயல்படும் கட்டுப்பாட்டு அறையின் செயல்பாடுகளையும், தேர்தல் தொடர்பான புகார்கள் பதிவு செய்யப்படுவதையும், அதன் மீது மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்தும் கேட்டறிந்து, cVigil செயலிகளில் தேர்தல் தொடர்பான புகார்கள் பதிவு செய்யப்படுவதையும், அதன்மீது மேற்கொள்ளப்பட்டுள்ள தொடர்நடவடிக்கைகள் குறித்தும் கேட்டறிந்து, தொடர்புடைய அலுவலர்களுக்கு தகவல்களை உடனடியாக தெரியப்படுத்திடவும் அறிவுறுத்தினார். தொடர்ந்து, புவியிடங்காட்டி (GPS) மூலமாக நிலையான கண்காணிப்புக்குழு, பறக்கும் படை குழுக்கள் மேற்கொண்டு வரும் வாகன சோதனை பணிகளை தேர்தல் பொது பார்வையாளர் மற்றும் செலவின பார்வையாளர் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

பின்னர், ஊடக கண்காணிப்பு அறையின் செயல்பாடுகளை பார்வையிட்டு தினசரி நாளிதழ்கள், தொலைக்காட்சி அலைவரிசை மற்றும் உள்ளூர் அலைவரிசைகளில் இந்திய தேர்தல் ஆணையம் வழிகாட்டுதலின்படி முறையாக விளம்பரங்கள் ஒளிபரப்பப்படுவதை கேட்டறிந்து இக்குழுக்கள் விழிப்புணர்வுடன் தொடர் கண்காணிப்பு பணியினை மேற்கொள்ள வேண்டும் என தேர்தல் பொது பார்வையாளர் மற்றும் செலவின பார்வையாளர் அறிவுறுத்தினர்.

பொதுமக்கள் தேர்தல் தொடர்பான கோரிக்கைகள் மற்றும் புகார்கள் ஏதும் இருந்தால், உளுந்தூர்பேட்டை, ரிஷிவந்தியம் சட்டமன்ற தொகுதிகள் தொடர்பான புகார்களுக்கு தேர்தல் பொது பார்வையாளர் திருமதி. இந்துமல்கோத்ரா, இ.ஆ.ப., அறை எண்.1, நெடுஞ்சாலைத்துறை பயணியர் மாளிகை, உளுந்தூர்பேட்டை என்ற முகவரிக்கும், கைப்பேசி எண். 9489981084-க்கும்,

சங்கராபுரம், கள்ளக்குறிச்சி சட்டமன்ற தொகுதிகள் தொடர்பான புகார்களுக்கு தேர்தல் பொது பார்வையாளர் திரு.சந்திரசேகர் வாலிம்பே, இ.ஆ.ப., அறை எண்.1, நெடுஞ்சாலைத்துறை பயணியர் மாளிகை, கள்ளக்குறிச்சி என்ற முகவரிக்கும், கைப்பேசி எண். 9489981082-க்கும்,

செலவினம் தொடர்பான புகார்களுக்கு தேர்தல் செலவின பார்வையாளர் திரு.பிரசன்னா வி.பட்டனசெட்டி, இ.வ.ப., அறை எண்.1, வனத்துறை பயணியர் மாளிகை, இந்திலி என்ற முகவரிக்கும், கைப்பேசி எண். 9489981081-க்கும்,

சட்டம் ஒழுங்கு தொடர்பான புகார்களுக்கு தேர்தல் காவல்துறை பார்வையாளர் திருமதி.அனுராதாசங்கர், இ.கா.ப., அறை எண்.1, வனத்துறை பயணியர் மாளிகை, உளுந்தூர்பேட்டை என்ற முகவரிக்கும், கைப்பேசி எண். 9489981083-க்கும் தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம்.

மேலும், மாவட்ட தேர்தல் கட்டுப்பாட்டு அறை தொலைபேசி எண்களான 04151-224155 04151-224156, 04151-224157, 04151-224158 மற்றும் 1800 4253 169, 1950 ஆகிய கட்டணமில்லா தொலைபேசி எண்களிலும் தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம்.

இவ்வாய்வின்போது மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சி.விஜய்பாபு, மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர்கள் திரு.டி.சுரேஷ் (பொது), திரு.இரா.சக்திவேல் (தேர்தல்), தனி வட்டாட்சியர் (தேர்தல்) திரு.பாலசுப்பிரமணியன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு:**

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்.